# ஆரவாரித்த மக்கள் மத்தியில் தலைவர் பிரபா மாமனிதர்களுக்கு விருதுகள் வழங்கினார்

(நமது நிருபர்)

ஐந்தாவது நாள் முத்தமிழ் விழாவில் தமிழீழத்தின் தேசிய தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொண்டு வான இரும் கரகோஷத்தின் மத்தியில் மாமனிதர்களுக்கான புலிச்சின்னம் பொறித்த தங்கப் பதக்கமும், நற்சான்றிதழ்களும் வழங்கி சிறப்புரையும் நிகழ்த்தினார்.

நேற்று மாலை சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட முத்தமிழ் விழாவில் பஞ்சாபிகேசன் குழுவினரின் மங்கள வாத்திய நிகழ்ச்சி இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து சரியாக எட்டு இருபது மணிக்கு பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே என்ற பாடல் ஒலி பெருக்கியில் முழங்க வானதிரும் கரகோஷத்தை அங்கு திரண்டு வந்திருந்த மக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள்: 04  விலை ரூபா: 4.50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி


நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 28  (11 - 06 1991)  செவ்வாய்க்கிழமை  ஓசை: 113

## க. பொ. த (சா.) பரீட்சை ஆகஸ்டில் நடைபெறும்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் நடைபெறாதிருந்த க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையை ஆகஸ்ட் மாதம் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆகஸ்ட் மாதத்தில் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த. (சாதாரணம்) புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டப் பரீட்சைகள், க. பொ.

(4 ஆம் பக்கம் பார்க்க)



தலைவர் பிரபாகரன் முத்தமிழ் விழா ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றுவதை முதலாவது படத்திலும், திரு. திருநாவுக்கரசு அவர்களின் விருதினை அவரிடமும், மறைந்த திரு. இராசரத்தினத்தின் விருதினை அவரது மனைவியாரிடமும் வழங்குவதை இரண்டாவது மூன்றாவது படங்களிலும், பிரதித்தலைவர், ஆலோசகர் ஆகியோருடன் விடை பெறுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

# விடுதலைப் போருக்கு உதவும் மக்கள் யாவரும் மாமனிதரே

## முத்தமிழ் விழாவில் தலைவர் பிரபாகரன்

(நமது நிருபர்)

"தேசிய விருது அளிப்பிற்கு ஒரு சில தேசபக்தர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஒட்டு மொத்தத்தில் இந்தப்பரிசளிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் கௌரவமாகவே கருதப்பட வேண்டும். எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அளப்பரியது. இலை மறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள்கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும், அபிமானிகளையும் மனவுறுதிபடைத்த மாமனிதர்கள் என்று தான் அழைக்க வேண்டும்.'' இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற ஐந்தாம் நாள் முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் பேசும் போது தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரன் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய முழுவிபரமும் வருமாறு.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

நான் இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நிகழ்வில் நேரடியாகப் பங்குகொள்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழீழ மண்ணின் விடிவிற்காக, தமிழீழ மக்களின் விமோசனத்திற்காக, தமிழீழ தேசியபண்பாட்டின்மறுமலர்ச்சிக்காக உழைத்தோரும் உழைத்துவருபவர்களுமான உன்னத மனிதர்களை, உண்மையான மண்ணின் மைந்தர்களை மதிப்பளித்துக் கௌரவிப்பதற்கு எனக்கு இத்தச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

### கௌரவிப்பது தமிழர் பண்பாடு

நற்பணிஆற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிப்பதும், கௌரவம் செலுத்துவதும் தமிழனின் பண்பாடு. இந்த சீரிய மரபுக்கு ஏற்ப, இந்த சிறப்பு வைபவத்தை ஒழுங்கு செய்த எமது இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழீழ தேசத்தின் அதியுயர்ந்த கௌரவமாக தேசிய விருது வழங்கி இங்கு கௌரவிக்கப்படுபவர்களை நாம் மாமனிதர்கள் என மதிப்பளிக்கிறோம் ஏனென்றால் இவர்கள் அனைவரும் அற்புதமான இலட்சியவாதிகள். இனப்பற்றும் நாட்டுப்பற்றுமுடைய தேசாபிமானிகள், சுயநல வாழ்வின் குறுகிய வட்டத்திற்கு அப்பால் நின்று, சமூக நலத்திற்காக, தேசிய நலத்திற்காக, மக்கள் நலத்திற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓடி வந்த மக்கள் வெள்ளம்

(சாவகச்சேரி)

''தலைவர் குரல்கேட்டதும் ஓடோடி வந்த மக்கள் வெள்ளம் மைதானத்தை நிறைமிடங்களில்சனசமுத்திரமாக்கியது நேற்று சாவகச்சேரியில் இடம் பெற்ற முத்தமிழ் விழாவின் போது தமிழீழத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தனது உரையை ஆரம்பித்து அவரது குரல் சாவகச்

(4ஆம் பக்கம் பார்க்க)

புனிதமண்ணில் போர்க்கோலம்
பூணுவதோ கலையழகு
பொன்மொழிக்கு விழாவெடுக்கும்
புதிய தலைமுறைக்கு புகழ் சூடி
எழுக எழுக என்றே என்றென்றும்
வாழ்த்துகிறோம்.
யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## போட்டிப் பரீட்சை

English Assistant Teachers தெரிவிற்கான
போட்டிப் பரீட்சை
துரித பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்: 17-06.91**

விரிவுரைகள்:
கந்தையா நவரேந்திரன்
விண்ணப்ப முடிவு திகதி:
14 - 06 - 91

விண்ணப்பப்பத்திரத்தையும் விபரக் கொத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

SCHOOL of BUSINESS ADMINISTRATION
16. 3rd Cross Street.
Jaffna. (B-2651)



## தேவை

சுகாதார, மருத்துவப்பயிற்சி நெறிக்கு கிராமங்களில் கடமையாற்றுவதில் ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் உணவு, தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும்;


குறைந்த கல்வித்தகைமை-: க.பொ.த (சாதாரணம்)
வயது :- 18 - 35

விண்ணப்பமுடிவு திகதி:- 2) . 06 . 91
பயிற்சிக்காலம்:-3 மாதம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

செயலாளர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
83/2 காங்கேசன்துறை வீதி
கொக்குவில் (R-1449)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சுப்பையா நிக்கிலஸ்**

பிறப்பு 04-01-1938 இறப்பு 11-06-1989

உன் மகன் புலியாக
இருந்ததால் உன்
உயிர் வாங்க நின்றார்கள்
பாரதத்தின்
பின் நின்ற கூலிகள்!
தலையை ஆட்டிப்
பிழைக்கின்ற பேடிகள்!
என்னதான் கண்டார்கள்?
தமிழீழத்தின்
இனப்போரில் உன்சாவும்
இணைந்ததையா...
பொன்னீழம் நாளைக்குப்
பூக்கும்! அந்த
பூப்பூக்க உன் சாவு
தண்ணீர் வார்க்கும்

(R-1445) உறவினர், நண்பர்கள்.


## வரி விளம்பரம்

"முள் முடிமன்னர்கள்"

ஒற்றைக் காகம் விடாமல் கரைந்துகொண்டிருந்தது. என்று ஆரம்பித்து 'அடக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம். தமிழ் ஈழத் தாயகத்தின் விடுதலைக்காகப் போராடுவோம்'' என்பது வரை யதார்த்தமாகவே எழுதியிருக்கிறார் சிதம்பர திருச்செந்திநாதன் (R-1448)

பயிற்சி வகுப்பு

விஞ்ஞான முறைப்படி உடை தயாரித்தல், சிகையலங்காரம் (Hair Style, Cake icing, General Cookery, Bridal Make-up Flower Making, Interior Decoration; அனித்தா பயிற்சி நிலையம் பூநாறிமடம் கொக்குவில். (B 2650)


## நினைவுப் போட்டிகள்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கப்டன் காந்தி நினைவாக மாபெரும் நாடகப்போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி நிலைய மண்டபத்தில் இடம்பெறும். வீரவேங்கை நவநீதன் நினைவாக கரபந்தாட்ட இறுதிப்போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (43)

## மாற்றம்

(கொழும்பு)

தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் சகல ஆவணங்களும், ஆதனங்களும் உரிமைகளும், பொறுப்புக்களும் இலங்கைத் தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என தொலைத்தொடர்புப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 15 - 07 - 1976



வீரமரணம் 12 - 05 - 1991

வீரவேங்கை
**புஷ்பகாந்**
(ஜயாத்துரை சிவதர்சன்)

மண்ணுக்காய் மரணித்த
தம்பி, சிவதர்சா
எங்களுக்கு நீ ஒரு
சிறு மழலை
ஆனால்
நீயோ மண் மீட்கப் புறப்பட்டு
மண்ணுக்கே உரமானாய்
உன் பிஞ்சுக் கரங்களிலே
ஆயுதத்தை ஏந்தி
அன்னை மண் மீட்க
அயராது போரிட்டாய்
வன்னி மண் பெற்றெடுத்த
மறவர் குலக் கொழுந்தே
தமிழ் ஈழ வரலாற்றில்
உன் தடங்கள் பதித்து விட்டாய்
அழுவது உனக்குப்
பிடிக்காத ஒன்று அதனால்
புஷ்பங்களை தூவுகின்றோம்
புஷ்பகாந்தா நாமெல்லாம்
நீ மீண்டும் ஒரு
தரிசனாய் வந்து
தமிழீழம் படையடா.

உன் கனவு நனவாக நாம் என்றும் உழைப்போம்.

யோகபுரம் மத்தி,
துஞ்சுக்குளம்,
மல்லாவி.
(R-1447)

அப்பா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார் பேரன், பேர்த்தி, அக்காமார், அண்ணா, தம்பி, உறவினர்.

## நினைவு கூருகின்றோம்... 1991 - 06 - 11

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை புகையிரத நிலையத்தில் வைத்து சிறிலங்கா ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 4 பொதுமக்கள்

1988ஆம் ஆண்டு கிரான் குளத்திலிருந்த இந்தியப்படை முகாமில் வைத்து கொலை செய்யப்பட்ட குருமண் வெளியைச் சேர்ந்த பொதுமகன்

1989ஆம் ஆண்டு வவுனியாவில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இருபொதுமக்கள்

1990ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி சிறிலங்காப்படை முகாம் இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**கபூர்** (கலியார் முகமது சலீம் - காங்கேயன் ஓடை)
**சபேசன்** (சாமித்தம்பி துரைரத்தினம்)
**நவயுகன்** (தம்பாப்பிள்ளை திருச்செல்வம் - கொக்கட்டிச்சோலை)
**கிரோ** (கொத்தியர் புலவு)
**வசந்தராஜ்** (கோயில் போரதீவு)
**விமலநாதன்** (பாக்கியராசா ரவி - மகிளவெட்டுவான்)

கல்குடா சிறிலங்காப்படை முகாம் இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**தாஷிவ்** (முகைதீன் பாவா அன்சாரி - திருக்கோணமடு, பொலநறுவை)

சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**செந்தில்** (கிண்ணையடி)
**ஹரி** (பூபாலபிள்ளை செல்வராசா - மன்னம்பிட்டி)
**2ஆம்லெப்.மார்சல்** (மார்க்கண்டு நமசிவாயம் - கிண்ணையடி)
**சகுந்தர்** (சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் - கோரகல்லி மடு)
**2ஆம்லெப்.சதீபன்** (பாக்கியராசா - விளாவெட்டுவான்)
**பரசு** (சந்திவெளி)

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

(B- 2649) **விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

## ■ சிந்தனைக்கு ■

அசைக்க முடியாத உறுதியும், திடசித்தமும் கொண்டவன், உலகைத் தன் வழியில், தானே உருவாக்கிக் கொள்வான்.

— யோஹன் கேத்தெ

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11 06 1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 2301
த.பெ.எண் 05

# தமிழனரப் புடம் போட்ட ஒருவருடப் போர்.

சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரண்டாம் கட்டப்போர் ஆரம்பமாகி ஒரு வருடம் பூர்த்தியாகி இன்று இரண்டாம் வருடம் ஆரம்பமாகின்றது.

தமிழீழ விடுதலைப் போரில் 1983 - 1987 ஆம் ஆண்டு ஜூலை வரை சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நான்கு வருடங்கள் நிகழ்ந்த முதலாம் கட்டப் போர். 1987 ஒக்டோபரில் இருந்து 1990 பெப்ரவரி வரை விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் நடந்த இரண்டரை வருடப் போர் இவை இரண்டையும்விட இம் முறைநடைபெறும் போர் தொடர்ச்சியானதும், பெரிய அளவினதுமாகும். இப்போரினால், முன்னைய போர்களைவிட இழப்புக்களும் பெரிய அளவில் நிகழ்ந்தன.

இப்போரில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரும். சுமார் ஆயிரம் போராளிகளும் இறந்தனர். அதேவேளை சிறிலங்கா இராணுவத்தின் இன அழிப்பு நடவடிக்கையினால் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் அகதிகளாகியுள்ளனர்.

ஆனால், இந்த ஒருவருடப் போர் அரசியல், இராணுவ ரீதியில் தமிழ் மக்களுக்குப் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளது. இம் மூன்றாம் கட்டப் போர் கடந்த காலப் போர்களைப் போல் அல்லாமல் மிகவும் நெருக்கடியின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. எவ்வகையிலும் இராணுவ மேலாதிக்கத்தை நிலை நாட்டிவிட வேண்டும் என்ற நோக்கில் இறுக்கமான பொருளாதாரத் தடை மேற்கொள்ளப்பட்டதோடு, ஓர் உள்நாட்டு யுத்தம் என்ற நிலையில் இருந்து மாறி இரு நாடுகளுக்கு இடையிலான போர் என்ற ரீதியில் போர் முறையும் மாறியது. யுத்தத்தில் விமானப் படையும், கடற்படையும் பெரும் பங்கு வகித்தன.

ஆனால், சிறிலங்கா எதிர்பார்த்த இராணுவ வெற்றி கிடைக்கப்பெறவில்லை. எதிர்மாறாக வடக்கின் பெரும் பாகம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தன. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கோட்டை, மாங்குளம் போன்ற இராணுவ முகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சி கண்டன. அதேவேளை கொண்டச்சி, கொக்காவில், கிளிநொச்சி போன்ற இராணுவ முகாம்களும் புலிகள் வசம் வந்தன.

ஒருபுறம் இராணுவ வெற்றியை விடுதலைப் புலிகள் ஈட்டிய அதேவேளை, மறுபுறம் பொருளாதார ரீதியான முற்றுகையை உடைத்தெறியும் வழிவகைகளில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. போக்குவரத்துச் சாதனங்கள் மாறின; உற்பத்தி முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தீவிர எரிபொருள் தடையினாலும், பொருளாதாரத் தடையினாலும் மக்கள் இன்னல்களை அனுபவித்தாலும் அவர்கள் முடங்கிப்போய்விடவில்லை. பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தன.

அதேவேளை, இராணுவ ரீதியான தோல்விகளைச் சந்திக்க, சந்திக்க சிறிலங்கா இராணுவம் கண்மூடித்தனமான இனப்படுகொலையில் இறங்கியது. இதனால் தமிழ் மக்கள் குறிப்பாக தென் தமிழீழ மக்கள் பெரிதும் இன்னலுற்றனர். தென் தமிழீழ மக்களின் பெரும் துயர் விடுதலைப் புலிகளின் அணுகுமுறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என இவ் வருட ஆரம்பத்தில் அறிவித்ததோடு ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தையும் அறிவித்தது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்து பேச முற்பட்டது. புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தத்தை பலவீனமெனக் கருதி இராணுவ நடவடிக்கைகளைத் தொடுத்தது. ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக கொண்டச்சியிலும், வேப்பங்குளத்திலும்; வவுனியன் குளத்திலும், ஓமந்தையிலும் பெரும் இராணுவ இழப்புக்களைச் சந்தித்தது.

இந்நிலையில், தற்பொழுது போரைத் தொடர்வதா? பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதா? என்ற குழப்பநிலையில் சிறிலங்கா உள்ளது. வெளிச் சக்திகள் சில போரைத் தொடர்ந்துநடத்தும்படி அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன ஆனால் உள்நாட்டு நிலைபரமும், தேவைகளும் போரைத் தொடர்ந்து நடத்த தடையாய் உள்ளன. ஆனால், விடுதலைப் புலிகள் குழப்பமற்று உள்ளார்கள். அவர்கள் நிபந்தனையற்ற பேச்சிற்கு தயார்; போரைத் தொடர்ந்து நடத்தவும் தயார். புலிகளின் இந்நிலை ஒன்றே தமிழ் மக்கள் இன்று பலமானதொரு நிலையில் உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தப்போதுமானதாகும்.

# முத்தமிழ் விழாவில் சில மணி நேரம்

'எமது தாய்மொழியாகிய தமிழ் வேற்று மொழித்தாக்கங்களிலிருந்து பேணிப்பாதுகாத்தல், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழீழ மண்மீட்புப் போராட்டத்துக்கு வீறுசேர்த்தல், பண்டைய எமது வரலாற்றுச் சிறப்புகளை மறந்து மொழி, நில உரிமைகளை இழந்து மாற்றானுக்கு அடிமையாகி விட்ட எமது சமுதாயத்தினிடையே விடுதலை வேட்கையை வீறு கொள்ள வைத்தல் இம் மூன்று இலக்குகளையும் கொண்டதே விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் முத்தமிழ் விழா. இது வெறும் பொழுது போக்கிற்காக நடத்தப்படும் விழாவல்ல'' இவ்வாறு முத்தமிழ் விழாவிற்கு முன்னர் தெல்லிப்பளையில் நடைபெற்ற எழுச்சி விழாவொன்றில் குறிப்பிட்டிருந்தார் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள்.

மானிப்பாயில் நிகழ்ந்த முத்தமிழ்விழா மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளும் அதையொட்டி அங்கு நிகழ்ந்த சம்பவங்களும் இதனையே உணர்த்துகின்றன. வழக்கமாக இசைக்கச்சேரி நடைபெறும் இடங்களில் சங்கீதரசிகர்கள் தவிர்ந்த ஏனையோர் அடுத்த நிகழ்ச்சி எப்போது நடக்கும் என்ற ஆவலில் இருப்பதே வழக்கம்; இது ஒன்றும் ரகசியமான விடையமல்ல. ஏனெனில் கச்சேரியின் இறுதிப் பகுதியில் தான் சில தமிழ்ப் பாடல்களைக் கேட்க முடியும். அதற்கு முன்னர் கச்சேரியின் பெரும் பகுதியை தெலுங்கு மொழியே ஆக்கிரமித்திருக்கும். ஆனால் முத்தமிழ் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்கென மைதானத்தையும் மிஞ்சி நின்றிருந்த மக்கள் கூட்டத்தின் அனைவரது கவனத்தையும் ஈர்த்து நின்றார் அன்று இசைக்கச்சேரி நிகழ்த்திய திரு. எல். திலகநாயகம் போல் அவர்கள். ''தமிழீழம்'' என்ற சொல்லை புகுத்தக் கூடிய அத்தனை இடத்திலும் புகுத்தி ஒரு முழுமையான தமிழ் இசைக் கச்சேரியாகவே செய்துவிட்டார் அவர். தமிழீழம் என்ற சொல்லை புகுத்தக்கூடிய அத்தனை இடத்திலும் புகுத்தி நாம் ஒரு தனித் தேசிய இனம், தனிநாட்டவர் என்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்றைய நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க ஒரு பேருந்தில் போராளிகள் வந்திருந்தனர். அவர்கள் அனைவருமே கால்கை இல்லாதவர்கள். இவர்களுடன் கண் இல்லாதவர்களும் வந்திருந்தனர். நாளாந்தம் நிகழ்ந்துகொண்டிருக்கும் போரில் இன்று ஒரு போராளி கால் இழந்தான், இன்று ஒரு போராளி கை இழந்தான், என்று கேள்விப்படுவதுண்டு தான், ஆனால் நேரே ஒரே இடத்தில் இவ்வளவு தொகையாக கால் இல்லாத, கையில்லாத போராளிகளைப் பார்க்கும் போது முத்தமிழ் விழா மலருக்கான வாழ்த்தில் யாழ். மாவட்டத் தளபதி தினேஷ் குறிப்பிட்டிருக்கும் ''யாழ். மாவட்டத்து மக்களின் காவலரண்களில் கண்விழித்திருக்கும் போராளிகளின் சார்பாக வாழ்த்துகின்றேன்'' என்ற வாசகமிங்கு தான் நினைவுக்கு வந்தது.

இந்திய சீனப்போரின்போது போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சிப்பாய்களை உற்சாகப்படுத்த பல கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பிரபல திரைப்பட நடிகர்கள் கலந்துகொண்ட நடன நிகழ்ச்சிகள், நாடகங்கள் இடம்பெற்றன. தமிழகத்திலிருந்து சிவாஜிகணேசன் தலைமையிலான குழுவுக்கே சென்று பல கலை நிகழ்ச்சிகளை நடத்தியது. அத்துடன் இரத்தத் திலகம் என்ற திரைப்படத்தையும் வெளியிட்டனர். இந்தியாவில் திரைப்படம்தான் மிகச் சிறந்த வெகுசனத்தொடர்புச் சாதனம்; ஆகவே இந்தியத் தேசிய உணர்வை மக்களிடம் ஊட்டுவதற்கு இது பயன்பட்டது அதுபோல் இந்திய-பாகிஸ்தான் போரின்போதும் கலைஞர்கள் சென்று சிப்பாய்களை ஊக்குவித்து நிகழ்ச்சிகளை நடத்தினர் அத்துடன் 'தாயே உனக்காக'' திரைப்படத்தை வெளியிட்டு மக்களிடம் தேசிய உணர்வை ஊட்டினர். கால், கை இழந்த இந்தப்போராளிகளையும். ஏற்கனவே தமது துப்பாக்கிகளுடன் நிலத்தில் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருந்த போராளிகளையும் காணும் போது இந்திய-சீனப்போரும் இந்திய-பாகிஸ்தான்போருமே நினைவுக்கு வந்தன. திரு சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டதுபோல ''தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழீழ மண் மீட்புப்போராட்டத்துக்கு வீறு சேர்த்தல்'' என்ற பணியினை இந்த முத்தமிழ்விழா நிறைவேற்றியுள்ளது என்றே கூறலாம்.

''தங்கக் கொடி சரி பண்ணுவேன், '' ''மாலு மாலு மாலு சுர ங்கனிகே மாலு'' போன்ற பாடல்களை தமிழ் என எண்ணி ரசித்துக் கொண்டிருந்த நாம் ''இந்த மண் எங்களின் சொந்த மண்'' என்ற பாடல்களைக் கேட்கும்போது இதுதான் எமது மொழி இது எமக்கே சொந்தமான மண் என்ற உணர்வுகளைப் பெறக் கூடியதாக இருந்தது. தமிழர் பண்பாட்டைச் சித்திரித்த 'பண்பாட்டுக்கிசைவாகப் பண்பாடு' பாடலைக் கேட்கும் போது நேற்று ராத்திரியம்மா போன்ற பாடல்களை நேயர் விருப்பத்துக்காக எழுதிப் போட்டதிற்காக வெட்கப்பட்டோம். வாகன வசதிகள் இல்லாத நிலையிலும் மைதானம் நிறைந்துதெருக்களை அடைத்துக்கொண்டு இதனை ரசித்து நின்ற மக்கள் கூட்டம் திரு சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்ட ''பண்டைய எமது வரலாற்றுச் சிறப்புகளை மறந்து மொழி, நில உரிமைகளை இழந்து மாற்றானுக்கு அடிமையாகி விட்ட எமது சமுதாயத்தினிடையே விடுதலை வேட்கையை வீறு கொள்ள வைத்தல்'' என்ற மூன்றாவது இலக்கை இந்த விழா பூர்த்தி செய்துள்ளதை எடுத்துக் காட்டியது.

தென் தமிழீழப் பிராந்தியமான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தளபதி கருணா புலிக்கொடி ஏற்றி முத்தமிழ் விழாவை (முதல் நாளே) ஆரம்பித்து வைத்ததும் இவ்விழா தனது மூன்று இலக்குகளிலும் பெரும் வெற்றிபெற்றிருப்பதும் ''இந்த நேரத்தில் இவ்விழா தேவைதானா'' என்ற முணுமுணுப்பை அர்த்தமிழக்கச் செய்துவிட்டது என்றே கூறலாம்.

---

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

## முத்தமிழ் விழா

### ஆறாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: நெல்லியடி 'மாவீரர் கலை அரங்கம்'
நாள் : 11 – 06 – 1991 செவ்வாய்க்கிழமை
நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை :
நாதஸ்வரம்: "காரைநகர்" திரு. என். கே. கணேசன்,
திரு. ஆர். சண்முகதாஸ்

தவில்: திரு. என். கே. வீராசாமி.
திரு. கே. பி. வீராசாமி

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரை

★ சிறப்புரை:
பேராசிரியர் துரைராஜா அவர்கள்
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

★ கவியரங்கம்
பொருள்: கேள்வி – பதில்
தலைமை: காரை. செ. சுந்தரம்பிள்ளை
கேள்வி பதில்
கவிஞர்கள்
ஜெ. சி. ஜெயசிலன் கல்வயல் வே குமாரசாமி
நாக. சிவசிதம்பரம் சோ. வே. பஞ்சாட்சரம்

★ குழுப் பாடல்

★ இராமநாதன் நுண்கலைப் பிரிவினர் வழங்கும்:
'வாத்ய ப்ருந்தா'

★ மீசாலை கலை, பண்பாட்டுக் குழுவினரின்
'விடிவை நோக்கி'
நாட்டிய நாடகம்.

★ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்
''போர்க்காலப் பாடல்கள்''
மெல்லிசை நிகழ்வு.

## தகவல் தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்தைப்பாதிக்கும் தகவல் அமைப்புச்சட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசு நிறைவேற்ற உத்தேசித்திருக்கும் தகவல் அமைப்புச் சட்டம் தொடர்புச் சாதனங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டது என்று இன்டர்நஷனல் பேப்பர் இன்ஸ்டிட்யூட், ஏப்ரல் மாதம் நடந்து முடிந்த அதன் பொதுக்குழுக் கூட்டத்தில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத் தீர்மானத்தின் நகலை அதன் தலைவர் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியிட்டார்.

பத்திரிகைச் சுதந்திரம் என்பது அத்தியாவசியமானது. இதை அரசியல்வாதிகளுக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்று மேற்படி அமைப்பின் தலைவர் குஸ்வன் இர்வானி கண்டித்துள்ளார். இவர் காத்தா 'ஸ்ரேதீஸ் மென்' பத்திரிகையின் நிர்வாக இயக்குனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் போருக்கு உதவும்

சேவையாற்றிய அபூர்வ மனிதர்கள்: இவர்களது அறிவாற்றல், படைப்பாற்றல், செயலாற்றல் அனைத்துமேதமிழீழ சமூகத்தின் மேன்மைக்கு உரமூட்டுவதாக அமைந்திருக்கிறது. இவர்களது பணி மேலும் தொடரவேண்டும்; இவர்களது தொண்டு மேலும் சிறக்க வேண்டும். இதனால்தான் இவர்களுக்குப் பெரும் மதிப்பளித்து, தேசிய விருது வழங்கி கௌரவிக்கத் தீர்மானித்தோம்.

### "தேசிய விருது"

இந்தக் கௌரவப் பரிசளிப்பை 'தேசிய விருது' என நாம் அழைப்பதில் அர்த்தமும் முக்கியத்துவமும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள்.

வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாக வாழ்ந்து வந்தோம். தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம். தேசியமாகவே வாழப்போகிறோம்:

எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக்கொண்டாலும்சரி, ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் சரி எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்கமுடியாத, எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்துகொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே

பிரத்தியேக தேசிய தொண்டு ஆற்றிய சிலருக்கு இன்று தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கின்றோம். ஆண்டுதோறும், முத்தமிழ் விழாவின் முக்கிய நிகழ்வாக இந்த தேசிய பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். ஆண்டுதோறும் மாமனிதர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். இந்தத் தேசிய விருது அளிப்பிற்கு ஒரு சில தேசபக்தர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஒட்டுமொத்தத்தில், இந்தப் பரிசளிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் கௌரவமாகவே கருதப்படவேண்டும்.

### போற்றப்படவேண்டிய மக்கள்

எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள், கௌரவிக்கப்படவேண்டியவர்கள் தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதிபடைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.

நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பழுவைப் பொதுமக்களே சுமந்து வருகிறார்கள்.

சாவும் அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்கமுடியாது;

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே, ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதீத அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சி என்றும் ஒருபொழுதும் வெற்றியளிப்பதில்லை.

### விடுதலை உணர்வை அழிக்க முடியாது

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது: ஏனென்றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்குச் சாவையும் அழிவையும் தாங்கொணாத் துயரையும் கொடுத்தபோதும் என்றுமில்லாதவகையில் தேசியப் பற்றுணர்வையும், சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கின்றது; தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது.

இன்று நாம் கொண்டாடி வரும் முத்தமிழ் விழா எமது மக்களது தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். போராட்டச் சூழலில் எல்லைகளில் எதிரியின் போர் முரசு கேட்கும் யுத்தகாலத்தில் சமுத்திரம்போல் திரண்டு வந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்கு கொள்கின்றார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப்பாட்டை, சுதந்திர அறைகூவலைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும், அசட்டை செய்யமுடியாது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம். "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" எனக் கூறிமுடித்தார் தலைவர் பிரபாகரன்.

## விடைத்தாள்கள் கொழும்பு சென்றன

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நடைபெற்ற விசேட உயர்தரப் பரீட்சை விடைத்தாள் பொதிகள் நேற்று முன்தினம் லொறி மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

விடைத்தாள்கள் கொழும்பைச் சென்றடைந்தபின்னரே இவற்றைத் திருத்துவதற்கான ஆசிரியர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு, அவர்கள் அழைக்கப்படுவார்கள். ஆயினும் இவற்றின் திருத்த வேலைகள் இம்மாதம் 25 ஆம் திகதியளவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## அரிப்பில் இராணுவம்

(மன்னார்)

சிலாவத்துறை, நானாட்டான் இராணுவ முகாம்களில் இருந்து ஒரே நேரத்தில் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் கடற்கரையோரமாக சென்று அரிப்பு என்னும் இடத்தில் தரித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ். பல்க. 888 பேர் அனுமதி

(கொழும்பு)

1990-91ஆம் கல்வி ஆண்டுக்கான யாழ். பல்கலைக் கழகம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

யாழ். பல்கலைக் கழகத்திற்கு 888 பேரும் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்திற்கு 195 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புளொட் உறுப்பினர் பலி

(வவுனியா)

வவுனியா - யாழ் வீதியில் விவசாயப் பண்ணைக்கருகாமையில் மோட்டார் சைக்கிள்-வான் மோதுண்டதில் புளொட் குழுவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி, தாண்டிக்குளம் பகுதியிலிருந்து வவுனியா நகரப்பகுதியை நோக்கி பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற வான், மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் அந்த மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த புளொட் குழுவைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார் (தி)

### க. பொ. த.

க. பொ. த.(உயர்தரம்) பரீட்சை ஆகியவற்றைச் சமகாலத்தில் நடத்துவது பற்றிய சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயப்படும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை ஆகஸ்ட் 3 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால், அது முடிவடைந்த பின்னரே க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை நடைபெறும் என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (ச)

### ஓடிவந்த மக்கள்

சேரிப் பிரதேசம் எங்கும் ஒலிபெருக்கியில் ஓங்கி ஒலித்ததும் முத்தமிழ் விழாவிற்கு வராமல் தமது வீடுகளில் உணவருந்திக் கொண்டிருந்தவர்களும், உறக்கத்திலிருந்தவர்களும் இடைநடுவில் அவற்றை நிறுத்திவிட்டு ஓட்டமும் நடையுமாக மின்னல் வேகத்தில் வந்தடைந்த மக்கள் கூட்டத்தினால் மைதானத்தின் எஞ்சியிருந்த இடைவெளிகளும் நிரம்பிக் கொண்டதால் அம்மைதானம் சிலநிமிடங்களில் சனசமுத்திரமாகியது. (க)

## வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரின் கலந்துரையாடல் ஒன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்குநடைபெறவுள்ளது.

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வலிகாமம் வடக்கிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து ஓராண்டாகியும் இவர்களது எதிர்காலம் தொடர்பாக இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதது தெரிந்ததே, எனவே இவர்களது எதிர்காலம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கலந்துரையாடலில் இப்பகுதியின் அரச நிறுவனங்கள், பொதுஸ்தாபனங்கள், சமய நிறுவனங்கள் பாடசாலைகள், தொழிற்சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு மேற்படி கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஆரவாரித்தமக்கள்

கள் எழுப்ப தலைவர் வே. பிரபாகரன் மேடைக்கு வந்தார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் யோகரட்ணம் யோகி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுதுமலை அம்மன் கோயிலில் எழுந்த சனசமுத்திரத்தில் தோன்றியதன் பின்பு நேற்று திங்கட்கிழமை மீண்டும் மக்கள் மத்தியில் தலைவர் தோன்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பாதுகாப்பு

நேற்றைய முத்தமிழ் விழா நிகழ்ச்சிக்கு ஏற்கனவே நவீன ஆயுதங்கள் தாங்கிய புலிகள் சாதாரண உடையில் கடுமையான பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இன்றுதலைவர் வே. பிரபாகரன் அவர்கள் மாமனிதர்களுக்கான விருதை நேரில்வழங்குவாரென அந்த மேடையில் திரு யோகி கூறியதும் அதுவரை ஏதுமறியாத மக்கள் தம்மையே மறந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கரகோசம் செய்தனர். மைதானம் எங்கும் புழுதி எழுந்தது. மேடையில் தமக்கே உரித்தான அந்தப் புன்னகையுடன் மேடையில் தோன்றிய போதும் பெரும் கரகோசமும் மகிழ்ச்சி ஆரவாரமும் வானைப் பிளந்தது.

தலைவருடன் கூட மேடையில் பிரதித்தலைவர் மகேந்திரராசாவும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் சுப்பிரமணியம், வே. பாலகுமாரன், தேவரண்ணா அவர்களும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் இருந்தனர்.

அதே வேளை அந்த மேடையினை சுற்றி விசேட புலிகள் படைப்பிரிவொன்று நின்றது தொடர்ந்து சிறப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதையிட்டும் இந்த மண்ணின் கலைஞர்களை கௌரவிப்பதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். என்றும் தலைவர் கூறியபோது மீண்டும் கரகோசமும் ஆரவாரமும் எழுந்தது இதே போல புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்று முடிவில் சொன்னபோதும் மகிழ்ச்சியில் பெரும் ஆரவாரம் எழுந்தது.

பின்புதேசிய விருதுபெறுவோரை ஒவ்வொருவராகதிருயோகி அவர்கள் அழைக்க பரிசில்வழங்கப்பட்டது. முதலாவதாக இலக்கியத்திற்கானவிருதுதிரு. காசி ஆனந்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டது இப்பரிசை காசிஆனந்தன் சார்பில் தேவரண்ணா அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிவானந்தசுந்தரம் அவர்களுக்கு மக்கள் பணிக்கான விருது வழங்கப்பட்டது இதனை இவரின் சகோதரி பெற்றுச் சென்றார். மூன்றாவது விருது உயிரை மதிக்காத தீரச்செயல் செய்ததற்காக பொ. அருணாசலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனை அவருடைய மகன் பெற்றுக்கொண்டார்: நான்காவதாக போராட்டத்தின் பங்களிப்பு விருதினை ஆ. இராசரத்தினம் அவர்கள் பெற்றார். இவரது விருதினை அவருடைய மனைவியார் பெற்றுக் கொண்டார். ஐந்தாவதாக நடராசா அவர்கள் போராட்ட பங்களிப்பு விருதினை பெற்றுக் கொண்டார். அடுத்து பத்திரிகைத் துறைக்கான விருதினை சிவஞானசுந்தரம் அவர்களும் கலைத் துறைக்கான விருதைதிருநாவுக்கரசு அவர்களும் அரும்பொருள் தொல் பொருள் பாதுகாப்பு விருதினை கலைஞானி அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

இறுதியாக மீண்டும் ஒலித்த கரகோசத்திற்கும் ஆரவாரத்திற்கும் மத்தியில் தலைவர் மக்களிடம் இருந்து விடைபெற்றுச்சென்றார் (லோ

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி அன்னமுத்து

வேலணையைச் சேர்ந்த திருமதி குமாரசாமி அன்னமுத்து காலமாகிவிட்டார். இவர் சோனாவத்தையை பிறப்பிடமாகக் கொண்டவரும், சரவணை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு நாகமுத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன் (யாழ் ஸ்பொட், கிளிநொச்சி) காலஞ்சென்ற சிவஞானம், இராசலட்சுமி, வடிவாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரி, பரமலிங்கம் (பரமு), ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நந்தகுமார், இரகுகுமார், சந்திரகுமார், ஸ்ரீகுமார், பிரதீப்குமார், திலிப்குமார், சற்குணவதி, செல்வநாயகம், மணிசோதி, இராசன், ஈஸ்வரி, அனுஷா, ஐங்கரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நண்பகல் 12-00 மணியளவில், றோ. க. த. க. பாடசாலை அருகாமையிலுள்ள 72ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(R/1452) தகவல்: சி. நடேசமூர்த்தி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.